# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, பராமரிப்புக் கோரிக்கைகள் (பரஸ்பர வலியுறுத்தல்) சட்டம்

---

(1998, நவெம்பர் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, நவெம்பர் மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 12.75 தபாற் செலவு : ரூபா 5.25

**1998 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, பராமரிப்புக் கோரிக்கைகள் (பரஸ்பர வலியுறுத்தல்) சட்டம்**

*[1998 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச. வ.- ஓ. 34/ 83*

**1956 ஆம் ஆண்டு யூன் 20 ஆம் தேதியன்று நியூயோர்க்கில் கையொப்பமிடப்பட்ட பராமரிப்பை வெளிநாட்டில் அறவிடுதல் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயத்துக்குப் பயன் கொடுப்பதற்கும் ; இலங்கையிலுள்ள ஆட்களினாலும் அல்லது ஆட்களிடமிருந்தும் ஏனைய நாடுகளிலுள்ள ஆட்களிடமிருந்தும் அல்லது ஆட்களினாலும் பராமரிப்பு அறவிடப்படுவதை இயலச்செய்வதற்கும் இலங்கைக்கு வெளியேயுள்ள ஆட்களுக்கெதிராகச் செய்யப்பட்ட விண்ணப்பங்களை விசாரிப்பதற்கு நீதிவான் நீதிமன்றத்திற்குள்ள நியாயாதிக்கத்தை விரிவுபடுத்துவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அத்துடன் அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்**

1956 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் தேதியன்று நியூயோர்க்கில் கையொப்பமிடப்பட்ட பராமரிப்பை வெளிநாட்டில் அறவிடுதல் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயத்துக்கான ஒப்பந்தத் திறத்தவர் ஒருவராக இலங்கை இருப்பதாதலாலும் : பாயிரம்.

அத்துடன், 1958 ஆம் ஆண்டு ஓகத்து 7 ஆந் தேதியன்று இலங்கை மேலே சொல்லப்பட்ட சமவாயத்தை முறையேற்புச் செய்துள்ளதாதலாலும் ;

அத்துடன், சொல்லப்பட்ட சமவாயத்தை இலங்கையின் வலுவாக்குவதற்கான சட்ட ஏற்பாட்டினை ஆக்குதல் அவசியமானதாகவும், உசிதமானதாகவும் இருப்பதாதலாலும் ;

ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

கருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டமானது, 1998 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, பராமரிப்புக் கோரிக்கைகள் (பரஸ்பர வலியுறுத்தல்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், 1956, யூன் 20 ஆந் தேதியன்று நியூயோர்க்கில் கையொப்பமிடப்பட்ட, பராமரிப்பை வெளிநாட்டில் அறவிடுதல் மீது ஐக்கிய நாடுகள் சமவாயத்தை இலங்கை உறுதிப்படுத்திய தேதியாகவுள்ள 1958, ஓகத்து 7ஆந் தேதியன்று, எல்லா நோக்கங்களுக்காகவும் இது நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

சட்டத்தின் ஏற்புடைமை.

2. (1) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் —

(அ) அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய நாடு ஒவ்வொன்று தொடர்பிலும் —

(i) அத்தகைய நாடு பராமரிப்புச் சமவாயம் ஏற்புடைத்தாகும் ஒரு நாடாக இருக்குமிடத்து; அல்லது

(ii) அந்நாடு தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையை நீடித்து இலங்கைக்கும் அத்தகைய நாட்டிற்கும் இடையில் உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்பட்டுள்ளவிடத்து ; அல்லது

(ஆ) இலங்கைக்கும் மக்கள் சீனக் குடியரசின் ஹொங்கொங் விசேட நிர்வாகப் பிராந்தியத்திற்கும் இடையில், அப்பிராந்தியம் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையை நீடித்து உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய விசேட நிர்வாகப் பிராந்தியத்திற்கு ஏற்புடைத்தாதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட நாடொன்று அல்லது விசேட நிர்வாகப் பிராந்தியம் இதனகத்துப் பின்னர் "குறித்துரைக்கப்பட்ட நாடு" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

*சமவாய நாட்டில் பராமரிப்பை அறவிடுதல் முதலியவற்றுக்காக இலங்கையிலுள்ள ஆளொருவரினால் விண்ணப்பம் செய்யப்படுதல்*

3. (1) (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "விண்ணப்பதாரர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கையிலுள்ள ஆளொருவர் வேறோர் ஆளிடமிருந்து (இதனகத்துப்பின்னர் "எதிர்வாதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் பராமரிப்பை அறவிட உரித்துடையவரெனக் கோருவதுடன், எதிர்வாதி அப்போதைக்கு குறித்துரைக்கப்பட்ட அந்நாட்டின் நியாயாதிக்கத்துக்கமைந்தவராகவுமிருக்குமிடத்து விண்ணப்பதாரர் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அந்த எதிர்வாதியிடமிருந்து பராமரிப்பை அறவிடுவதற்கான தனது கோரிக்கையைக் குறித்துரைக்கப்பட்ட அந்நாட்டிற்கு அனுப்பி வைக்கச் செய்வதற்காக (இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு விண்ணப்பஞ் செய்யலாம்.

(2) விண்ணப்பதாரர் ஒருவர் —

எதிர்வாதியொருவரால் விண்ணப்பதாரருக்கு பராமரிப்பைச் செலுத்துமாறு விதித்துரைக்கப்பட்ட நாடொன்றில் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையொன்றை —

(அ) வலுவுக்கிட ; அல்லது

(ஆ) வேறுபடுத்த

நாடுவதுடன், எதிர்வாதி அப்போதைக்கு அந்நாட்டில் வதிபவராகவும் இருக்குமிடத்து, விண்ணப்பதாரர் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, விடயத்திற்கேற்ப அக்கட்டளையை வலுவுக்கிடுவதற்காக அல்லது வேறுபடுத்துவதற்கான தமது

விண்ணப்பத்தை அந்த விதித்துரைக்கப்பட்ட நாட்டுக்கு அனுப்பி வைக்கச் செய்வதற்காக செயலாளருக்கு விண்ணப்பஞ் செய்யலாம்.

(3) விடயத்திற்கேற்ப (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது செயலாளர், விண்ணப்பத்தை அதனுடனிணைந்த எவையேனும் ஆவணங்களுடன் சேர்த்து அத்தகைய விதித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

இலங்கையில் பராமரிப்பை அறவிடுவதற்காக, விதித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள ஆட்களினால் விண்ணப்பஞ் செய்யப்படுதல்.

4. (1) விதித்துரைக்கப்பட்டவொரு நாட்டிலுள்ள ஆள் ஒருவரினால் அப்போதைக்கு இலங்கையில் வதிகின்ற வேறோர் ஆளிடமிருந்து பராமரிப்பை அறவிடுவதற்கான விண்ணப்மொன்றை அந்நாட்டிலுள்ள தோதான அதிகாரியிடமிருந்து செயலாளர் பெற்றுக்கொள்ளுகின்றவிடத்து, அவர் அவ்விண்ணப்பத்தை, அதனுடனிணைந்த எவையேனும் ஆவணங்களுடன் சேர்த்து, அவ்வேறு ஆள், எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றாரோ, அந்த நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பத்தை விசாரிப்பதற்கான நியாயாதிக்கத்தையுடைய நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றவேண்டுமென்ற அழைப்பாணையொன்று அந்த வேறு ஆளுக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட முடியாதிருந்தால், நீதிமன்றப் பதிவாளர், (3) ஆம் உட்பிரிவுக்கமைய விண்ணப்பத்தையும், அதனுடனிணைந்த ஆவணங்களையும், அத்தகைய வேறு ஆள் அந்நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதியவில்லையென்றும் அத்தகைய ஆள் இருக்குமிடம் தெரியவில்லையென்றும் குறிப்பிடும் கூற்றொன்றுடன் சேர்த்துச் செயலாளருக்கு திருப்பி அனுப்புதல் வேண்டும். அதன்மீது, செயலாளர் விண்ணப்பத்தையும் அதனுடனிணைந்துள்ள ஆவணங்களையும் குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள தோதான அதிகாரிக்கு மீள அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி, விண்ணப்பமானது எந்த நீதிவான் நீதிமன்றப் பதிவாளருக்கு அனுப்பப்பட்டதோ, அந்நீதிவான் நீதிமன்றப் பதிவாளர், வேறு ஆள் இலங்கையில் வேறொரு நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிக்கின்றாரெனத் திருப்தியடைந்தால், அவர் அத்தகைய நிகழ்வுபற்றி செயலாளருக்கு அறிவித்து அவ்விண்ணப்பத்தையும் அதனுடனிணைந்த ஆவணங்களையும் அந்த வேறு செயலாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன் செயலாளர் அத்தகைய விண்ணப்பத்தையும் அதனுடனிணைந்த ஆவணங்களையும் அந்த வேறு நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் எந்நீதிவான் நீதிமன்றப் பதிவாளருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டதோ அப்பதிவாளர், அது (1) ஆம் உட்பிரிவின்கீழ் தமக்கு அனுப்பப்பட்டிருந்தாற் போன்று அதன்மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று —

(அ) பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றுக்கான கட்டளையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம், 4 ஆம், 5 ஆம் பிரிவுகள் அத்தகைய விண்ணப்பம் தொடர்பிலும் அதனைப் பின்பற்றி ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை தொடர்பிலும் ஏற்புடையனவாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) விண்ணப்பதாரர் நீதிமன்றத்தின் முன்னிலையில் நேரடியாக சமுகமாயிருந்ததைப் போன்று நடவடிக்கை எடுக்கப்படுதலும் வேண்டும்.

(6) அவ்விண்ணப்பத்தின்மீது, நீதிவான் நீதிமன்றமானது கட்டளையொன்றை ஆக்கும்போது, பதிவாளர் அக்கட்டளையை, அந்நோக்கத்திற்கெனப் பேணப்படும் இடாப்பொன்றில் பதிதல் வேண்டும்.

(7) பதிவுசெய்யப்பட்ட கட்டளையொன்றின்மீது வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவு அக்கட்டளை நீதிவான் நீதிமன்றத்தில் பதியப்பட்டிருக்கையில், நீதிவானால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பராமரிப்புக்கட்டளைச் சட்டத்தின் 8அ அத்துடன் 8ஆ என்னும் பிரிவுகள் பதியப்பட்ட அத்தகைய கட்டளை தொடர்பாக ஏற்புடையனவாதலும் ஆகாது.

சமவாய நாடொன்றில் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை வலுவுக்கிடுதல்.

5. (1) செயலாளர், குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிலுள்ள தோதான அதிகாரியிடமிருந்து, அந்நாட்டிலுள்ள நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின்மீது, அப்போதைக்கு இலங்கையில் வதியும் ஆளொருவரிடமிருந்து பராமரிப்பை அறவிடுவதற்கு அந்நாட்டிலுள்ள ஆளொருவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைப் பெறுமிடத்து, அவர் அத்தகைய விண்ணப்பத்தை வலுவுக்கிடவிழையும் கட்டளையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் அதனுடனிணைந்த வேறு எவையேனும் ஆவணங்களுடன் சேர்த்து, அத்தகைய கட்டளையின்கீழ் கொடுப்பனவுசெய்வதற்கு ஆளாகும் ஆள் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் வதிகின்றாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப் பெற்றதன்மீது, அத்தகைய கட்டளையை அந்நோக்கத்திற்கென பேணப்படவேண்டிய இடாப்பொன்றில் பதிவுசெய்வதும் அதனையடுத்து அத்தகைய பதிவுசெய்யப்பட்ட கட்டளையை அக்கட்டளையின்கீழ் கொடுப்பனவு செய்வதற்கு ஆளாகும் ஆளுக்குச் சேர்ப்பித்தலும் பதிவாளரின் கடமையாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு விண்ணப்பமொன்று அனுப் பப்படுகின்றதோ அந்தப் பதிவாளர், வலுவுறுப்பட வேண்டுமென நாடப்பட்டுள்ள கட்டளையின்கீழ் கொடுப்பனவு செய்வதற்கு ஆளாகும் ஆள் —

(அ) இலங்கையிலுள்ள வேறு ஏதேனும் நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் வதிகின்றார் எனத் திருப்தியுறுமிடத்து, அவர் அத்தகைய நிகழ்வை செயலாளருக்கு அறிவித்து சான்றுபடுத்தப்பட்ட கட்டளையின் பிரதியையும் அதனுடனிணைந்த வேறு எல்லா ஆவணங்களையும் செயலாளருக்குத் திருப்பி யனுப்புதல் வேண்டும் என்பதுடன் செயலாளர், சான்றுபடுத்தப்பட்ட கட்டளையின் பிரதியையும் அதனுடனிணைந்த வேறு எல்லா ஆவணங்களையும் அந்த வேறு நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும் ; அல்லது

(ஆ) அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக் கத்திற்குள் வதியவில்லையெனவும் அத்தகைய ஆள் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லையெனவும் திருப்தியுறுமிடத்து, அவர் விண்ணப்பத்தையும் கட்டளையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியையும் அதனுடனிணைந்த வேறு எல்லா ஆவணங்களையும் செயலாளருக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும் ; இவர் குறித்துரைக்கப்பட்ட எந்த நாட்டிலிருந்து விண்ணப்பம் அனுப்பப்பட்டதோ அந்தக் குறித் துரைக்கப்பட்ட நாட்டிற்கு அவற்றைத் திருப்பி யனுப்புதல் வேண்டும்.

(4) நீதிவான் நீதிமன்றமொன்றில் கட்டளை பதிவுசெய்யப்பட்டிருக்கையில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கட்டளையொன்றின்கீழ் வருமதியான ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவு, நீதிவானால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தின் 8அ அத்துடன் 8ஆ என்னும் பிரிவுகள் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட கட்டளை தொடர்பில் ஏற்புடைத்தாதலும் ஆகாது.

*சட்டமுறையற்ற பிள்ளையொன்றின் தொடர்பிலான விண்ணப்பம்.*

6. இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் பெறப்பட்ட விண்ணப்பம் சட்டமுறையற்ற பிள்ளையொன்றின் தொடர்பிலானதாய் இருக்குமிடத்து பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் நோக்கத்திற்கு, எந்த ஆளிடமிருந்து பராமரிப்பின் அறவீடு நாடப்படுகின்றதோ அந்த ஆள், விண்ணப்பம் தொடர்புறுத்தும் பிள்ளையின் பிறப்பின் பின்னரான பன்னிரண்டு மாதங்களுக்குள் இலங்கைக்கு வெளியேயுள்ள நீதிமன்றமொன்றினால் பிரயோகிக்கப்பட்ட சட்டத்தின் தேவைப்பாடுகளைப் பின்பற்றி அதன் பராமரிப்புக்கான பணத்தைச் செலுத்தியுள்ளார் என எண்பித்தல் போதுமானதாதல் வேண்டும்.

## பதியப்பட்ட கட்டளைகளை மாற்றுதல், வலியுறுத்தல், வேறுபடுத்தல் அத்துடன் அழித்தல்

*கட்டளைகளை மாற்றுதல்.*

7. (1) பதிவுசெய்யும் நீதிமன்றத்தின் பதிவாளரானவர், பதிவு செய்யப்பட்ட கட்டளையொன்றின்கீழ் கொடுப்பனவு செய்பவர் அந்நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதியாதொழிந்துள்ளாரென்று அபிப்பிராயப்படுமிடத்து அப்போது கொடுப்பனவு செய்பவர் இலங்கையில் வதியாதொழிந்துள்ளாரென்று அபிப்பிராயப்பட்டாலொழிய அவர், (2) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக, கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் தொடர்புபட்ட ஆவணங்களையும் செயலாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) பதிவுசெய்யும் நீதிமன்றத்தின் பதிவாளரானவர், கொடுப்பனவு செய்பவர் இலங்கையிலுள்ள வேறொரு நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றாரென்று அபிப்பிராயப்படுமிடத்து, அந்நிகழ்வைப் பற்றி செயலாளருக்கு அறிவித்து, கட்டளையை செயலாளருக்கு மாற்றுதல் வேண்டும் என்பதுடன் செயலாளர் ஆவணங்களை இயைபான நீதிமன்றத்தின் பதிவாளருக்கு மாற்றுதலும் வேண்டும். (3) ஆம் உட்பிரிவிற்கமைய நீதிமன்றத்தின் பதிவாளர், அந்நோக்கத்திற்காக பேணப்படவேண்டிய இடாப்பொன்றில் கட்டளையைப் பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளையின் பிரதியொன்றை கொடுப்பனவு செய்பவருக்குச் சேர்ப்பிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவைப் பின்பற்றி கட்டளையொன்றைப் பதிவுசெய்வதன் முன்னர் நீதிமன்றத்தின் பதிவாளர் கட்டளையின்கீழ் கொடுப்பனவு செய்பவர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றாரா என்பதனை ஆய்ந்தறியும் நோக்கத்திற்குப் பொருத்தமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் என்பதுடன் இந்நடவடிக்கைகளை எடுத்தபின்னர், கொடுப்பனவு செய்பவர் அவ்வாறு வதியவில்லையென அவர் திருப்திப்படுவாராயின் அவர் கட்டளையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியையும் சார்புடைய ஆவணங்களையும் செயலாளருக்குத் திருப்பியனுப்புதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் கட்டளையொன்றின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று, கொடுப்பனவு செய்பவர் இலங்கையில் வதியாதொழிந்துள்ளார் எனப் பதிவாளரால் கையொப்பமிடப்பட்ட அறிவித்தலொன்றுடன் செயலாளரால் பெறப்படுமிடத்து, செயலாளர் கட்டளையின் பிரதியையும் சார்புடைய ஆவணங்களையும் குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள தோதான அதிகாரிக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

8. (1) கட்டளையொன்று எந்நீதிமன்றத்தால் ஆக்கப்பட்டதோ அந்நீதிமன்றமல்லாத நீதிமன்றமொன்றில் பதிவுசெய்யப்பட்ட பதியப்பட்ட கட்டளையொன்று பதிவுசெய்கின்ற நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டிருந்தது போன்றும் அதனை ஆக்குவதற்கு அந்நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் உண்டென்றாற்போன்றும் வலியுறுத்தப்படலாமென்பதுடன், அத்தகைய ஏதேனும் கட்டளையை, வலியுறுத்துவதற்கான அல்லது வலியுறுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் இவ்வுட்பிரிவிற்கிணங்க, ஆனால் வேறு வகையிலல்லாது எடுக்கவும்படலாம். கட்டளைகளை வலியுறுத்தல்.

(2) இச்சட்டத்தின்கீழ் கட்டளையொன்று எந்நீதிவான் நீதிமன்றத்தில் பதியப்பட்டதோ அந்நீதிவான் நீதிமன்றமும், அதன் அலுவலர்களும் கட்டளையை வலியுறுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கை களையும் எடுத்தல் வேண்டும்.

பதிவுசெய்யப்பட்ட கட்டளையொன்றை வேறுபடுத்துதல்.

9. (1) செயலாளர் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிலுள்ள தோதான அதிகாரியிடமிருந்து பதிவுசெய்யப்பட்ட கட்டளையொன்றை வேறுபடுத்துவதற்கு அந்நாட்டிலுள்ள ஆளொருவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைப் பெறுமிடத்து அவர், விண்ணப்பத்தை அதனுடனிணைந்த எவையேனும் ஆவணங்களுடன் சேர்த்து, பதிவுசெய்யும் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) பதிவுசெய்யும் நீதிமன்றத்தின் பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பத்தை விண்ணப்பம் தொடர்புறுத்தும் கட்டளையை வேறுபடுத்து வதற்கான விண்ணப்பமொன்றாகக் கருதுதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பத்தை விசாரிக்கும் நீதிமன்றமானது, விண்ணப்பதாரர்கள் நீதிமன்றத்தின் முன்னிலையில் இருப்பதைப்போன்று விசாரணையைத் தொடர்ந்து நடாத்து தலும் வேண்டும்.

பதிவுசெய்யும் நீதிமன்றத்தால் ஆக்கப்படாத கட்டளையொன்றை வேறுபடுத்துவதற் கான தத்துவம்.

10. (1) பதிவுசெய்யப்பட்ட கட்டளையொன்று, எந்த நீதிமன்றத்தால் கட்டளை ஆக்கப்பட்டதோ அந்த நீதிமன்றம் அல்லாத வேறு நீதிமன்றமொன்றில் பதிவுசெய்யப்படுமிடத்து, பதிவுசெய்யும் நீதிமன்றம், பதிவுசெய்யும் நீதிமன்றத்தால் அது ஆக்கப்பட்டிருந்தாற்போன்றும் அதனை ஆக்குவதற்கு அந்நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டிருந்தாற்போன்றும் கட்டளை வேறுபடுத்துவதற்கான அல்லது இல்லாதொழிப் பதற்கான தத்துவம் உடையதாதல் வேண்டும்.

(2) பதிவுசெய்யும் நீதிமன்றம் பதிவுசெய்யும் கட்டளை யொன்றை இல்லாததாக்குமிடத்து பதிவை இல்லாதொழித்தல் வேண்டும்.

(3) பதிவுசெய்யப்பட்ட கட்டளையொன்றை வேறுபடுத்து வதற்கான அல்லது இல்லாதொழிப்பதற்கான விண்ணப்ப மொன்றிற்கான எதிர்வாதி விண்ணப்பத்தை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் தோன்றாதவிடத்து, ஆனால்,

(அ) எதிர்வாதி இலங்கைக்கு வெளியே வதிகின்றார் எனவும் ; அத்துடன்

(ஆ) விண்ணப்பம் செய்யப்படுவது பற்றியும் மேலே கூறப்பட்ட நேரத்தையும் இடத்தையும் பற்றியும் போதியளவு அறிவித்தல் எதிர்வாதிக்குக் கொடுக்கப்பட்டுள்ளதெனவும்

நீதிமன்றம் திருப்தியுறுமிடத்தும் அந்த நேரத்திலும் இடத்திலும்,எதிர்வாதி தோன்றியிருந்தாற்போன்று அதேமுறையில் நீதிமன்றம் விசாரணைக்கு அல்லது விசாரணையின் ஏதேனும் ஒத்திவைப்புக்கு நியமித்த நேரத்திலும் இடத்திலும் விசாரணையைத் தொடர்ந்து நடாத்தித் தீர்மானிக்கலாம்.

(4) நீதிவான் நீதிமன்றமொன்று வேறொரு நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட கட்டளையொன்றை வேறுபடுத்தும் அல்லது இல்லாதொழிக்கும் கட்டளையொன்றை ஆக்குமிடத்து அல்லது ஆக்கமறுக்குமிடத்து, இடருற்ற ஆளொருவர், பதிவுசெய்யப்பட்ட கட்டளை முதலிற் கூறப்பட்ட நீதிமன்றத்தால் ஆக்கப்பட்டிருப்பின் அவருக்கிருந்திருக்குமாப் போன்று, கட்டளைக்கெதிராக அல்லது மறுப்புக்கெதிராக மேன்முறையீட்டு உரிமையுடையவராதல் வேண்டும்.

*குறித்துரைக்கப்பட்ட நாட்டில் கொடுக்கப்பட்ட சான்றின் ஏற்கத்தகுந்த தன்மை.*

11. (1) (அ) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிலுள்ள நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளில் கொடுக்கப்பட்ட சான்றினை எடுத்துக்காட்டுகின்றதான அல்லது சுருக்கக் கூறுகின்றதாகக் கொள்ளப்படும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணமொன்றில் ; அல்லது

(ஆ) இலங்கையிலுள்ள ஏதேனும் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக அத்தகைய நீதிமன்றமொன்றின் சார்பாகச் செய்யப்பட்ட வேண்டுகோளொன்றுக்கு மறுமொழியாகவாயினும்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ் சரி, அத்தகைய நாடொன்றில் எடுக்கப்பட்ட சான்றினை எடுத்துக்காட்டுகின்றதாக அல்லது சுருக்கமாகக் கூறுகின்றதாகக் கொள்ளப்படும் முறையில் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணமொன்றில் ; அல்லது

(இ) அத்தகைய நாடொன்றிலுள்ள நீதிமன்ற நடவடிக்கைகளில் சாட்சியமாகப் பெற்றுக்கொள்ளப் பட்டதாகக் கொள்ளப்படுகின்ற அல்லது அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட ஆவணமொன்றின் பிரதியொன்றாக இருக்கும் முறையிலாக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணமொன்று

அடங்கியுள்ள கூற்றொன்று, இச்சட்டத்தின்கீழ் நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு விண்ணப் பத்தினைப் பின்பற்றி அந்நீதிமன்றத்தில் எழும் எவையேனும் நடவடிக்கை அதன்கண் கூறப்பட்ட ஏதேனும் நிகழ்வுபற்றிய சான்றாக இந்நடவடிக்கைகளில், அந்த நிகழ்வின் வாய்மூலச் சான்றானது, ஏற்புடைக்கின்ற அதே அளவுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(2) (1) (அ) என்னும் உட்பிரிவில் கூறப்பட்டவாறாகக் கொடுக்கப்பட்ட அல்லது (1) (ஆ) என்னும் உட்பிரிவில் கூறப்பட்டவாறு எடுக்கப்பட்ட சான்றினை எடுத்துக்காட்டுவதாக அல்லது சுருக்கமாகக் கூறுவதாகக் கொள்ளப்படும் ஆவணமொன்று அந்த ஆவணத்தின் உண்மைப் பிரதியொன்றாக அல்லது அச்சான்றினை எடுத்துக்காட்டுகின்ற அல்லது பதிவுசெய்கின்ற அல்லது விடயத்துக்கேற்றாற்போல சுருக்கமாகக் கூறுகின்ற மூல ஆவணமாக இருப்பதாக எந்நீதிபதி, நீதிவான் அல்லது வேறு ஆளின் முன்னர் சான்றானது கொடுக்கப்பட்டதோ அல்லது, விடயத்திற்கேற்றவாறு எந்நீதிபதியால், நீதிவானால் அல்லது வேறு ஆளினால் அது எடுக்கப்பட்டதோ அவரால் உறுதிப்படுத்தப்பட்டதாகக் கொள்ளப்படும் ஆவணமானது, கருத்தைத் தெரிவித்தால் அப்பிரிவின் நோக்கங்களுக்காக, முறையாக உறுதிப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) (இ) என்பதில் கூறப்பட்டவாறாகச் சான்றாகப் பெறப்பட்டிருப்பதாக அல்லது அவ்வாறு பெறப்பட்ட ஆவணமொன்றின் பிரதியொன்றாக இருப்பதாகக் கொள்ளப்படும் ஆவணமொன்று, அத்தகைய ஆவணத்தைப் பெறுகின்ற சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் நீதிபதியினால், நீதிவானால் அல்லது அலுவலரால் அவ்வாறு பெறப்பட்ட அவ்வாவணம் அத்தாட்சிப்படுத்தப்பட்டதாகக் கொள்ளப் படுமானால் அல்லது அவ்வாறு பெறப்பட்ட ஆவணத்தின் உண்மைப் பிரதியொன்றாக இருக்குமானால், அவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக முறையாக உறுதிப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எவையேனும் அத்தகைய நடவடிக்கைகளில் அத்தகைய சான்றிதழைக் கொடுத்துள்ளாரெனக் கொள்ளப்படும் ஆளினது கையொப்பத்தை அல்லது அலுவலக நிலையை எண்பிக்க வேண்டியது அவசியமானதாதல் ஆகாது.

(5) இப்பிரிவு இல்லாவிட்டால் சான்றாக ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏதேனும் ஆவணம், சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலை இப்பிரிவிலுள்ளதெதுவும் பாதித்தலாகாது.

இலங்கையில் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கும் நோக்கத்துக்காகச் சான்றைப் பெறுதல்.

12. (1) விதித்துரைக்கப்பட்ட நாடொன்றிலிருந்து செயலாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பமொன்றைப் பின்பற்றி இலங்கையிலும் நீதிமன்றமொன்றானது, இச்சட்டத்தின்கீழ் அந்நீதிமன்றத்தில் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளின் நோக்கத்துக்காக, தோதான அதிகாரிக்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள நீதிமன்றத்துக்கு, விண்ணப்பத்தோடு தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பாக அங்கு வதிகின்ற ஆளொருவரின் சான்றை, அந்நாட்டில் எடுப்பதற்கான வேண்டுகோளொன்றை விடுக்குமாறு செயலாளரை வேண்டிக் கொள்ளலாம்.

(2) இப்பிரிவின்கீழ் நீதிமன்றமொன்றினால் செய்யப்பட்ட வேண்டுகோளானது —

(அ) சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தின் விபரங்களைத் தருதல் வேண்டும் ;

(ஆ) எவ்வாளினது சான்று எடுக்கப்படவுள்ளதோ அவ்வாளின் பெயரையும், முகவரியையும் குறிப்பிடுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) எவ்விடயங்கள் தொடர்பாக அத்தகைய ஆளின் சான்று தேவைப்படுகின்றதோ அவ்விடயங்களைக் குறித்துரைத்தல் வேண்டும்.

குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள நீதிமன்றத்தின் வேண்டுகோளின் மீது சான்றைப் பெறுதல்.

13. (1) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு ஏற்புடைத்தாகின்ற விண்ணப்பமொன்றோடு தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கையில் வதியும் ஆளொருவரின் சான்றைப் பெறுமாறு விதித்துரைக்கப்பட்ட நாடொன்றினால் அல்லது அதன் சார்பாகச் செயலாளருக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டிருக்குமிடத்து, செயலாளர் வேண்டுகோளில் விதித்துரைக்கப்படக்கூடியவாறு அத்தகைய விண்ணப்பத்துடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் அத்தகைய ஆளின் சான்றைப் பெறுமாறு, அத்தகைய ஆள் எந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றாரோ அந்த நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் விதித்தல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ், வேண்டுகோளொன்று செயலாளரிடமிருந்து எந்நீதிமன்றத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்நீதிமன்றம் சான்றை எடுக்கும் தத்துவம் உடையதாதல் வேண்டுமென்பதுடன், சான்று எடுக்கப்படவுள்ள காலத்தையும், இடத்தையும் பற்றி அந்த ஆட்களுக்கு அறிவித்தல் கொடுத்ததன் பின்னர், அது பொருத்தமானதென நினைக்கும் அத்தகைய முறையில் வேண்டுகோளில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக வேண்டுகோள் பெயர்குறிக்கப்பட்ட ஆளினது சான்றை, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு பெறப்பட்ட சான்றானது, விதித்துரைக்கப்பட்ட அலுவலரினால், (1) ஆம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட வேண்டுகோளொன்றானது, குறித்துரைக்கப்பட்ட நாட்டின் எந்நீதிமன்றத்தால் அல்லது எந்நீதிமன்றத்தின் சார்பாக ஆக்கப்பட்டதோ அந்நீதிமன்றத்துக்கு நீதிமன்றத்தால் அனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) எந்த ஆளுடைய சான்று பெறப்படவுள்ளதோ அந்த ஆள் எந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் வதிகின்றாரோ அந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றுமாறு தேவைப்படுத்தும் அழைப்பாணையை அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்க முடியாவிடில், நீதிமன்றத்தின் பதிவாளர் அத்தகைய வேண்டுகோளை விடுக்கும் விண்ணப்பத்தை அத்தகைய ஆள் அந்நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் வதியவில்லை. அத்துடன் அத்தகைய ஆள் இருக்குமிடமும் தெரியவில்லை என்ற கூற்றொன்றுடன் செயலாளருக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும். செயலாளர், அதன்மீது விடுக்கப்பட்ட வேண்டுகோளுடன் தொடர்புடைய ஆவணங்களை (1) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள எந்த நீதிமன்றத்தால் அல்லது எந்த நீதிமன்றத்தின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்திற்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

(4) மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பமானது, எவ்வாளினால் ஆக்கப்பட்டதோ, அவ்வாள் அல்லாத எவரேனும் ஆள், இப்பிரிவின் பயனைக்கொண்டு இலங்கையிலுள்ள ஒரு நீதிமன்றத்தின்முன் சான்றளிக்கத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அரசினால் ஏற்பாடுசெய்யப்பட்ட பணத்தொகைகளிலிருந்து ஆளொருவரின் தோன்றுகையின் இடைநேர்விளைவாக உண்மையான உறப்பட்ட செலவு, சிரமம் அல்லது நேர இழப்பு என்பவற்றுக்காக, இழப்பீடு செலுத்தப்போதுமானதென நீதிமன்றத்துக்கு நியாயமாகத் தோன்றுகின்றவாறான அத்தகைய பணத்தைச் செலுத்துதல் வேண்டுமென்று நீதிமன்றமானது கட்டளையிடலாம்.

(5) சாட்சிக்காரர்களின் தேவையைக் கட்டாயப்படுத்துவதற்கும் சார்புடைய வேறு விடயங்களுக்கும் ஏற்பாடுசெய்கின்ற, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மேலேயுள்ள (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட வேண்டுகோளொன்று எந்நீதிமன்றத்திற்கு விடுக்கப்பட்டதோ நீதிமன்றம் தொடர்பில் விண்ணப்பமானது, அந்நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டிய முறைப்பாடொன்றென்றாற்போன்று, ஏற்புடைத்தாதல் வேண்டும்.

நிலைபெயர்கால ஏற்பாடுகள்.

**14.** ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டு ஒகத்து 7 ஆந் தேதிக்குப்பின்னர் ஆனால் இச்சட்டம் அத்தாட்சிப்படுத்தப்படும் தேதிக்குமுன்னரான ஏதேனும் தேதியன்று, பராமரிப்புச் சமவாயமானது, எந்நாட்டுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்நாடொன்றின் தோதான அதிகாரியிடமிருந்து, அந்நாட்டிலுள்ள ஆளொருவரினால் அப்போதைக்கு இலங்கையில் வதிபவராக வேறோர் ஆளிடமிருந்து பராமரிப்பை அறவிடுவதற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைச் செயலாளர் பெற்றுள்ளவிடத்து, அத்தகைய நாடானது, அத்தகைய விண்ணப்பம் செயலாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளிலிருந்து இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அது தொடர்பான கட்டளையொன்று குறித்துரைக்கப்பட்ட எந்நாடு தொடர்பில் ஆக்கப்பட்டதோ அந்த குறித்துரைக்கப்பட்ட நாடொன்றாகக்

கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க, எவ்வாளிடமிருந்து பராமரிப்பு அறவீடு நாடப்படுகின்றதோ அவ்வாள் எந்நீதிவான் நீதிமன்றத்தினது நியாயாதிக்கத்தினுள் வதிகின்றாரோ அந்நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு, அத்தகைய விண்ணப்பத்தை இச்சட்டத்தின்கீழ் கையாளப் படுவதற்காக, செயலாளர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

முஸ்லிம்கள் தொடர்பான விண்ணப்பங்கள் பற்றிய பேணல்கள்.

15. (அத்தியாயம் 115) முஸ்லிம் திருமணம் மண நீக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் ஆளப்படும் ஒரு முஸ்லிம் தொடர்பான பராமரிப்புக்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில் இச்சட்டத்திலுள்ள ஒரு "நீதிவான் நீதிமன்றம்" பற்றிய குறிப்பீடொவ்வொன்றும் அச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட இயைபான காதி பற்றிய குறிப்பீடொன்றாக வாசிக்கப்படுதலும் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

16. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

17. இச்சட்டத்தில் –

"அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி" என்பது நீதிமன்றமொன்றின் கட்டளையொன்று தொடர்பாக உண்மைப் பிரதியொன்றாக இருப்பதான நீதிமன்றத்தின் முறையான அலுவலரொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கட்டளையின் பிரதியொன்று என்று பொருள்படும் ;

"பராமரிப்பு சமவாயம்" என்பது, 1956 ஆம் ஆண்டு யூன் 20 ஆந் தேதி கைச்சாத்திடப்பட்ட பராமரிப்பை வெளிநாட்டில் அறவிடுதல்மீதான ஐக்கிய நாடுகள் சமவாயம் என்று பொருள்படும் ;

"கொடுப்பனவு செலுத்துபவர்" என்பது பதியப்பட்ட கட்டளையொன்று தொடர்பாகக் கட்டளையின்கீழ் கொடுப்பனவுகள் செய்யவேண்டியவரான ஆள் என்று பொருள்படும் ;

"பதிவுசெய்யும் நீதிமன்றம்" என்பது, பதியப்பட்ட கட்டளையொன்று தொடர்பாக இச்சட்டத்தின்கீழ், அக்கட்டளையானது அப்போதைக்கு எந்நீதிமன்றத்தில் பதியப்படுகின்றதோ அந்நீதிமன்றமென்று பொருள்படும் ;

"பதியப்பட்ட கட்டளை" என்பது, இச்சட்டத்தின்கீழ் இலங்கையிலுள்ள நீதிமன்றமொன்றில், அப்போதைக்கு பதியப்பட்ட கட்டளையொன்று என்று பொருள்படும் ; அத்துடன்

"தொடர்புபட்ட ஆவணங்கள்" என்பது —

(அ) எந்த விண்ணப்பத்தைப் பின்பற்றி கட்டளை ஆக்கப்பட்டதோ அந்த விண்ணப்பம் ;

(ஆ) கொடுப்பனவு செலுத்துபவர் எங்கிருக்கிறார் என்பதுபற்றி தன்வசமுள்ள அத்தகைய தகவலைத் தரும் கூற்று ; அத்துடன்

(இ) வழக்குத் தொடர்பாக தன்வசமுள்ள எவையேனும் தொடர்பான ஆவணங்கள்

என்று பொருள்படும்.